நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 18.02.2026 . மலர் 04 . இதழ் 48. செவ்வாய்க்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 18.02.2026 . VOL 04 . ISSUE 48. WEDNESDAY . 4 PAGES . Rs.5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## ஆட்சியில் பங்கு கேட்டு போர்க்கொடி :

# எம்.பி. பதவி ராஜினாமாவா ?

## மாணிக்கம் தாகூர் விளக்கம் !!

மதுரை, பிப்.18-

எம்.பி. பதவியை ராஜினாமா செய்ய திட்டமா? என்பது குறித்து காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர் விளக்கம் அளித்துள்ளார்.

விருதுநகர் காங்கிரஸ் எம்.பி மாணிக்கம் தாகூர்கூறியதாவது-

காங்கிரஸ் இன்றி திமுக அரசு அமைக்க முடியாது என தவெக நிர்வாகி நிர்மல்குமார் கூறியிருப்பது அவரது கருத்து.

ஆட்சியில் பங்கு என்ற கோரிக்கை குறித்து தலைமைக்கு தெரியும். ஏற்கெனவே கடந்த 17-ம் தேதி கட்சியின் தலைமையிடம் பேசிவிட்டுதான் வந்தேன். செல்வப்பெருந்தகைக்கும், எனக்குமான பிரச்சினை என்பது அண்ணனுக்கும் தம்பிக்குமானது. இதில் பெரியதாக ஒன்றுமில்லை. அவர் என் மீது புகார் அளிக்க டெல்லிக்குப் போவதாக வெளியாகும் தகவலில் ஒன்றுமில்லை. நீங்கள் (பத்திரிகையாளர்கள்) பெரிதாக்க வேண்டாம்.

ஆட்சியில் பங்கு என்பதில் ராகுல் காந்தி கருத்து என்ன என்பதை நீங்கள்தான் அவரிடம் கேட்க வேண்டும். மாணிக்கம் தாகூர் ராஜினாமா போன்ற வதந்திகளை அல்லர, சில்லரை ஐடி விங் செய்கின்றன. கரூர் நாடாளுமன்ற உறுப்பினரை தவறாக பார்க்கும் சங்கிகளின் பார்வை தொடர்கிறது. மாநிலத் தலைவராக இருக்கும் நயினார் நாகேந்திரன் எப்படி பெண்களை பற்றி அவதூறாக பேசி, அதற்காக வருத்தப்பட்டிருக்கிறார். மாவட்டத் தலைவர்களுக்கும் அந்த வியாதி ஒட்டியுள்ளது என்றார் மாணிக்கம் தாகூர்.

# நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பட்டியலில் மாநகராட்சி துணைமேயர் பிரின்சிலதா முதலிடம் !


## பெண் வேட்பாளரை களமிறக்கி தட்டித்தூக்கப்போகும் அறிவாலயம் - உற்சாகத்தில் தொண்டர்கள் !!











நாகர்கோவில், பிப்.18-

நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் யார்? என்ற கழக உடன்பிறப்புகளின் எதிர்பார்ப்பில் தற்போது முன்னணியில் இருப்பவரும் பேசு பொருளாகவும் மாறி இருப்பவர் நாகர்கோவில் மாநகராட்சியின் துணை மேயர் மேரி பிரின்சிலதா ஆவார்.

நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளராக போட்டியிட கட்சி தலைமை தனக்குத்தான் சீட் ஒதுக்கும் என சில முக்கிய நபர்கள் தங்கள் ஆதரவாளர்களுக்கு தெரிவித்து வருகின்றனர். ஆனால் இந்த முறை நாகர்கோவில் தொகுதியை இழக்க திமுக தலைமை விரும்பவில்லை மாறாக ஒரு பெண் வேட்பாளரை நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி வேட்பாளராக களம் இறக்கி வெற்றி வாகை சூட முடிவு செய்து அதற்கான பணியையும் ரகசியமாக செய்து முடித்துள்ளதாக மூத்த கழக உடன்பிறப்புகள் தெரிவித்து வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டம் 6 சட்டமன்ற தொகுதிகளை கொண்ட மாவட்டம் இதில் மாவட்டத்தின் தலைநகரான நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி மிக முக்கியமான தொகுதியாக பார்க்கப்பட்டு வருகிறது. நாகர்கோவில் தொகுதியில் வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக சார்பில் வேட்பாளராக நாகர்கோவில் மாநகராட்சியின் துணை மேயர் மேரி பிரின்சிலதாவை களமிறங்க தலைமை முடிவு செய்துள்ளதாக அரசியல் வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது. 2026 சட்டமன்றத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், தேர்தலை எதிர்கொள்ள ஆளுங்கட்சியான திமுகவும், எதிர்கட்சியான அதிமுகவும் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றனர்.

**வாக்காளர்களை கவரும் தேர்தல் அறிக்கைகள்**

தமிழக தேர்தல் களத்தை பொருத்தவரை வாக்காளர்களை கவரும் வகையில் தேர்தல் அறிக்கை என்பது எப்போதுமே மிக முக்கியம் வாய்ந்தவையாக திகழும் .

அதன் அடிப்படையில் ,தேர்தல் அறிக்கை தயாரிப்பதில் திமுகவும் அதிமுகவும் அதிதிவிரம் காட்டி வருகின்றனர்.கடந்த தேர்தல் அறிக்கையின் போது திமுக அறிவித்த மகளிர் உரிமைத் தொகை திட்டம் பெரிதளவில் பொதுமக்களிடையே தாக்கத்தை ஏற்படுத்தியது . இந்த திட்டம் திமுக ஆட்சி அமைப்பதற்கு உறுதுணையாக இருந்தது என்றே கூறலாம்.இத்திட்டத்ததை திமுக அரசு கனகச்சிதமாக நிறைவேற்றியும் வருகிறது.

திராவிட மாடல் ஆட்சியின் மூலம் மாநிலம் முழுவதும் வளர்ச்சித் திட்டங்கள் தீவிரமாக நடைமுறைக்கு வருகின்றன. விடியல் பயணம், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், நான் முதல்வன், தமிழ்ப் புதல்வன், மாணவர்களுக்கு லேப்டாப் வழங்கும் திட்டம் என பல்வேறு சமூகநலத் திட்டங்கள் மக்கள் வாழ்க்கையில் மாற்றத்தை உருவாக்கி வருகின்றன" அவற்றில் முக்கியமாக 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' இந்திய அளவிலும் கவனம் பெற்றுள்ளது.மாதந்தோறும் 1.31 கோடி பெண்களுக்கு ரூ.1000 வழங்கப்பட்டு வருகிறது. சமீபத்தில் பிப்ரவரி-ஏப்ரல் மாதங்களுக்கு சேர்த்து ரூ.3000 மற்றும் கோடைக்கால சிறப்புத் தொகை ரூ.2000 என மொத்தம் ரூ.5000 வழங்கப்பட்டது.

மேலும், மீண்டும் ஆட்சி அமைந்தவுடன் இந்தத் தொகை மாதம் ரூ.2000 ஆக உயர்த்தப்படும் என்ற உறுதியையும் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால் அதிமுகவும் தற்போது வரை இரண்டு கட்டமாக பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீச தொடங்கியுள்ளது . இதற்கு ஈடுகொடுத்து வாக்காளர்களை தங்கள் வசபடுத்த திமுக தலைமை தேர்தலை அறிக்கை தயாரிக்கும் பணிகளில் மும்முறமாக செயலாற்றுவதுடன் வேட்பாளர்கள் தேர்விலும் எந்தவித குளறுபடியும் நடந்து விடாதபடிக்கு கனகச்சிதமாக வேட்பாளர்களை தேர்வு செய்து வைத்துள்ளது

**கூட்டணி**

தேர்தலில்,இது ஒருபுறம் இருந்தாலும் மற்றொரு புறம் கூட்டணி கணக்குகள் இடம் பெறுகின்றன.வலுவான கூட்டணியாக இருந்து வரும் திமுக வுக்கு அதன் கூட்டணி கட்சிகள் பல நெருக்கடிகளை கொடுத்தாலும் அனைத்தையும் சமாளித்து வலுவான கூட்டணியுடன் தேர்தல் களம் காண உள்ளது. அதேபோல் திமுக கூட்டணிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அதிமுக தலைமையிலான கூட்டணியும் அமைந்துவிட்டது என்றே கூறலாம். தற்போது வரை 50-50 என்ற சூழலில் தான் இருகட்சிகளின் கூட்டணியும் அமைந்துள்ளது. எனவே இந்த தேர்தலில் திமுக தனது பலத்தை நிரூபிப்பதற்காக 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி பெறுவோம் என உறுதியுடன் தெரிவித்து அதற்கு உண்டான பணிகளையும் செய்து வருகிறது.

**வேட்பாளர் தேர்வு**

தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக மற்றும் அதிமுக இரண்டு கட்சிளுக்குமே தங்கள் கட்சிகளுக்குள்ளேயே கோஷ்டி பூசல் வலுவாக உள்ளது. எனவே தேர்தலில் வெற்றி பெற ,தேர்தல் அறிக்கை, கூட்டணி கணக்குகள் எனவுள்ள நிலையில், அதற்கு அடுத்தபடியாக வேட்பாளர் தேர்வு மிக முக்கிய அம்சங்களாக உள்ளது. வாக்காளர்களின் மத்தியில் நற்பெயருடன், கழகத்திற்காக பணியாற்றி உடன்பிறப்புகளை அரவ ணைத்து எல்லோராலும் அறியப்பட்ட வேட்பாளர்களை தேர்வு செய்வதில் மும்மரம் காட்டி வருகிறது திமுக தலைமை. கரணம் தப்பினால் மரணம் என்ற கணக்கில் வேட்பாளர் தேர்வு இருந்து வரும் நிலையில், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் திமுக சார்பில் வேட்பாளராக தீவிரம் காட்டி வரும் பட்டியலில் குமரி கிழக்கு மாவட்ட செயலாளர் மேயர் மகேஷ், முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹெலன் டேவிட்சன் ஆகியோர் பெயர்கள் இடம் பெற்றுள்ளதாக அவர்கள் ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர். இவர்களில் யாரை வேட்பாளராக களம் இறங்கினாலும் வெற்றி என்பது எட்டாக்கனி மட்டுமே என்பதை உணர்ந்த திமுக தலைமை,கோஷ்டி பூசலில் சிக்கிகொள்ளாத மற்றும் சொந்த செல்வாக்கு அதிகம் உள்ளவரும், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம் வாக்காளர்கள் ஆதரிக்கும் வேட்பாளராக களம் இறக்க வேண்டும் என்று முடிவு செய்து அதனடிப்படையில் வேட்பாளர் தேர்வு பணியில் தீவிரம் காட்ட தொடங்கியுள்ளது. நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியை பொருத்தவரை தற்போது சட்டமன்ற உறுப்பினராக இருப்பவர் பாஜகவை சேர்ந்த எம் ஆர் காந்தி ஆவார் இவருக்கு நாகர்கோவிலில் ஆதரவு அதிகம் உள்ளதால் திமுக தலைமை வேட்பாளர் தேர்வில் அதிக கவனம் செலுத்த தொடங்கியுள்ளது.

**துணை மேயர் மேரி பிரின்சி லதா**

இவர் திராவிட முன்னேற்றக் கழக பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்திலிருந்து வந்தவர் இவருடைய கணவர் மற்றும் மாமனார் ஆகியோர் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள். துணை மேயர் மேரி பிரின்சிலதா திராவிட முன்னேற்றக் கழக நகர தொண்டரணி துணை அமைப்பாளராகவும் தற்போது மாநகர துணைச் செயலாளராக பதவி வகித்து வருகிறார். மேலும் கோட்டாறு மறை மாவட்ட குடும்ப நலப்பணிக்குழு வட்டார உறுப்பினர், கோட்டாறு மறைமாவட்ட அருட்பணிப் பேரவை உறுப்பினர். கிறிஸ்தவ வாழ்வு சமூகம் வட்டார உறுப்பினர், மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி பெண்கள் முன்னேற்றத்திற்கான பயிற்சி. ஏழை பெண்களுக்கு இலவ தையல் இயந்திரங்கள் வழங்குதல் போன்ற சமுதாய தொண்டாற்றி வருவதால் சமூகத்தில் நற்பெயர் இருந்து வருகிறது. மேலும் அமைதியான முக சுபாவம் கொண்டவராக கழக உடன்பிறப்புகளை அரவணைத்து செல்வது மட்டுமல்லாமல், பொதுமக்கள் எந்நேரத்திலும் இவரை எளிதில் அணுக முடியும் என்ற நற்பெயருடன் வலம் வருபவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையான கமிஷன் கரப்ஷன் போன்ற எந்த ஒரு விஷயங்களிலும் சிக்காமல் தனது பணியை நேர்மையுடன் செய்து வருபவர். இவருக்கு பெண்கள் மத்தியில் அமோக வரவேற்பு இருந்து வருகிறது. தற்போதைய மேயரின் நெருக்கடி மற்றும் எதிர்ப்பிற்கு மத்தியில் தைரியமாக போராடி தலைமை கழகத்திற்கு எந்த ஒரு அவப்பெயரும் ஏற்படுத்தாதபடி மக்கள் பணி செய்து வருபவர். பல இடங்களில் ஒரு பெண் என்று பாராமல் சொந்தக் கட்சியில் முக்கிய நபர்களால் நிராகரிக்கப்பட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையை பின்பற்றுவதிலும் கழகம் தனக்குத் தந்த பொறுப்பை வெகு கச்சிதமாக செய்து முடிப்பதிலும் இவர் வல்லவர். ஆகவே இவருக்கு வாய்ப்பு வழங்கினால் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் வாக்குகளை பெறுவது எளிது எனவும், கோஷ்டி பூசலில் இருந்து திமுக தன்னை தற்காத்து கொள்ளலாம் எனவும் திமுக தலைமை முடிவு செய்துள்ளதாக அறிவால தகவல்கள் வெளியாகியுள்ளன.

**மேயர் மகேஷ்**

இவர் நாகர்கோவில் தொகுதி மக்களிடையே நன்கு பரிச்சயமானவர் ஆவார் இவர் தன்னை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இனைத்துக் கொண்ட நாள் முதல் மிகவும் சுறுசுறுப்புடன் பணியாற்றி மாநகர செயலாளர், மாவட்டச் செயலாளர் என வளர்ச்சி கண்டவர் நாகர்கோவில் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு நடைபெற்ற முதல் மேயர் தேர்தலில் மாநகராட்சிக்கு உட்பட்ட நான்காவது வார்டில் போட்டியிட்டு வெற்றி பெற்று மாமன்ற உறுப்பினர்களால் மேயராக தேர்வு செய்யப்பட்டார். முன்னாள் மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சர்ருமான சுரேஷ் ராஜனின் தீவிர ஆதரவாளராக இருந்த இவர் மேயர் தேர்தலுக்குப் பின் அமைச்சர் மனோ தங்கராஜன் தீவிர ஆதரவாளராக மாறியதால் கட்சி தலைமையில் இவருக்கு நெருக்கம் அதிகம் ஏற்பட்டது. நாளடைவில் அமைச்சர் மனோ தங்கராஜ் உடன் இவருக்கு மோதல் போக்கு ஏற்பட்டு மேயரின் ஆதரவாளர்களும், அமைச்சர் மனோ தங்கராஜ்ன் ஆதரவாளர்களும் மோதிக்கொள்ளும் அளவில் உள்கட்சி பூசல் நிலவி வருகிறது. மேலும் கட்சித் தொண்டர்களை பொது இடங்களில் வைத்து மரியாதை குறைவாக நடத்தி , தாறுமாறாக திட்டுவதால் இவருடன் ஆரம்ப காலத்தில் இருந்த ஆதரவாளர்கள் இவரை விட்டு விலகிச் சென்றுவிட்டதாக கூறப்படுகிறது. அதேபோல் உதவி கேட்கும் கழக உடன்பிறப்புகளுக்கு இவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் உதவி செய்வதில்லை என்ற குற்றச்சாட்டும் இவர் மீது உண்டு. மேலும் நாகர்கோவில் மாநகராட்சியில் நடைபெற்ற சாலை பணி, சாக்கடை ஓடைப்பணி, மழை நீர் வடிகால் ஓடைப்பணி, குளம் தூர்வாருதல், நடைபாதை அமைப்பது போன்ற பணிகளை தொடங்கி வைத்து புகைப்படம் எடுப்பதில் காட்டும் ஆர்வம் பணி நடைபெறும் போது பணியை ஆய்வு செய்வதில் இல்லை என்ற குற்றச்சாட்டும் இவர் மீது உண்டு. அதேபோல் அண்மையில் ஒரு தேசிய அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற கட்சியின் நிர்வாகியால் இவர் மீது நாகர்கோவில் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படுத்தியதாக குற்றச்சாட்டு சமூக வலைத்தளங்களில் உலா வந்தது. இதனால் தலைமைக்கு இவர் மீது அதிருப்தி ஏற்பட்டு உள்ளதாக தொண்டர்களே தெரிவிக்கின்றனர். அதேபோல் தலைமை பாஜகவை விமர்சிக்கும் போதும், எதிர்த்து நிற்கும் போதும் குமரி மாவட்டத்தில் பாஜகவை எதிர்த்து நிற்க வேண்டிய கிழக்கு மாவட்ட திமுக முற்றிலுமாக பாஜகவினருக்கு சாதகமாக செயல்பட்டு வருவதாகவும், பாஜகவின் மாமன்ற உறுப்பினர்களுடன் நெருக்கம் காட்டி தன்னுடைய மேயர் பதவியை தக்க வைத்துக் கொண்டு வருவதாகவும், மேலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களை அரவணைத்து செல்ல இவர் தவறியதாகவும், கோயில் விழாக்களுக்கு மட்டுமே இவர் முன்னுரிமை அளித்து மற்ற மதம் சார்ந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்ப்பதாகவும் இவர் மீது கழக கண்மணிகளே தலைமைக்கு புகார் அளித்துள்ளதால் தலைமை இவருக்கு இந்த தேர்தலில் வாய்ப்பு வழங்க தயக்கம் காட்டி வருவதாகவும், பரவலாக பேசப்பட்டு வருகிறது.

**ஹெலன் டேவிட்சன்**

இவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். இவர் கனிமொழிக்கு கருணாநிதிக்கு மிகவும் நெருக்கமானவர் கனிமொழி தென் மாவட்டங்களுக்கு வரும் போது அவருடன் இவரை பார்க்க முடியும் என்பதாலும் தற்போது கனிமொழி தென் மாவட்ட தேர்தல் பொறுப்பாளராக இருப்பதால் தனக்கு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் வேட்பாளராக களம் காண சீட்டு ஒதுக்கப்படும் என்று தனது ஆதரவாளர்களுக்கு இவர் தெரிவித்து வருகிறார். மேலும் இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போதும் தற்போதும் முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜனின் தீவிர ஆதரவாளராகவே இருந்து வருகிறார். இவர் கட்சி நடத்தும் முக்கிய நிகழ்வுகளில் மட்டுமே கலந்து வருவதாகவும் தலைமை அறிவிக்கும் போராட்டங்களில் தலை காட்டுவதும் மட்டுமே இவரின் வேலை மாறாக சமூக பணி செய்வது பொதுமக்கள் சேவை செய்வது போன்ற செயல்களில் இவரைப் பார்க்க முடியாது எனவும் இவரின் ஆதரவாளர்களே இவரை எந்த நேரத்திலும் சந்திக்க முடியாது என்ற நிலை உள்ளதாக தொண்டர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடும் போது இவருக்காக முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் மற்றும் தொண்டர்கள் உற்சாகத்துடன் பணியாற்றினார்கள். ஆனால் தற்போது முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜனும் நாகர்கோவில் தொகுதியை தனக்கு தர வேண்டும் என தலைமையை கேட்டு வருவதால் இவருக்காக சுரேஷ் ராஜன் தரப்பினர் வேலை செய்வார்களா என்பது சந்தேகமாக உள்ளது ஆகவே சிபாரிசு அடிப்படையில் ஹெலன் டேவிட்சன் பெயர் தலைமைக்கு சென்றாலும் தலைமை இம்முறை 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவதில் உறுதியாக உள்ளது. எனவே இவருக்கு இம்முறை தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்காது என அறிவாலைய வட்டாரங்கள் தெரிவித்து வருவதாக ஒரு தகவலும் உண்டு.

எது எப்படியோ நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் ஒரு பெண் வேட்பாளரை நிறுத்தி நாகர்கோவில் தொகுதியை கைப்பற்ற தலைமை கழகம் ஏற்கனவே முடிவு செய்து வேட்பாளராக தற்போது நாகர்கோவில் மாநகராட்சியில் துணை மேயராக இருந்து வரும் மேரி பிரின்ஸி லதாவின் பெயரை டிக் செய்து ரகசியமாக வைத்துள்ளதாகவும், வேட்பாளர் அறிவிப்பின் போது இவர்தான் வேட்பாளர் என அறிவித்து உடன்பிறப்புகளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்க உள்ளது எனவும் திமுகவின் 200 தொகுதிகளுக்கு மேல் வெற்றி என்று இலக்கில் குமரி மாவட்டத்தில் 6 சட்டமன்ற தொகுதிகளிலும் திமுக மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்கள் அமோக வெற்றி பெற்று மீண்டும் முதல்வர் மு க ஸ்டாலின் தலைமையிலான நல்லாட்சி தமிழகத்தில் தொடரும் என மூத்த நிர்வாகிகள் தெரிவித்து வருகின்றனர்.

# திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சிகளில் வளர்ச்சித் திட்ட பணிகள் : மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் ஆய்வு



திருவள்ளூர், பிப்.17-
மீஞ்சூர் (ம) திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சி ஆகிய பாதைகளில் நடைப்பெற்று வரும் வளர்ச்சித் திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், நந்தியம்பாக்கம் ஊராட்சியில் நெடுஞ்சாலைகள் துறை சார்பில் ரூ.44.5 கோடி மதிப்பீட்டில் அத்திப்பட்டு நந்தியம்பாக்கம் இடையே கட்டடப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளையும், மீஞ்சூர் ஊராட்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்க கட்டட கட்டுமான பணிகளையும், மீஞ்சூர் பேரூராட்சி பகுதியில் பேரூராட்சி துறை சார்பில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அறிவுச்சார் மையம் மற்றும் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் தாமரைகுளம் சுற்றி நடைபாதை மற்றும் பூங்கா கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, வேப்பம்பட்டில் நெடுஞ்சாலைகள் துறை சார்பில் ரூ.56 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 13 கட்டுமானப் பணிகளையும், செவ்வாய்பேட்டையில் ரூ.8.1 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 15 கட்டுமானப் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்திரவிட்டார்.

மேலும், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், காக்களூர் ஊராட்சி காக்களூர் ஏரி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வரும் பணிகளையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்க கட்டட கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை

துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

இவ் ஆய்வில் மீஞ்சூர் பேரூராட்சி தலைவர் திருமதி.ருக்மணிமோகன்ராஜ், உதவி செயற்பொறியாளர் கஜலட்சுமி, மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவி (வ.ஊ), குணசேகரன் (கி.ஊ), உதவி பொறியாளர்கள் யாஸ்மின், நரசிம்மன், ஐசக் கெவின், மீஞ்சூர் பேரூராட்சி செயல் அலுவலர் மகேஷ்வரி, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) தணிகாச்சலம், திருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பி.செல்வகுமார், உதவி செயற்பொறியாளர் கோவேந்தன், திருவள்ளூர் வட்டாட்சியர் பாலாஜி, உதவி பொறியாளர், நெடுஞ்சாலைகள் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

# திருச்சி : அமைச்சர் நேருவை முற்றுகையிட்டு மனு அளித்த பொதுமக்கள்



திருச்சி, பிப்.18-
திருச்சி பீமா நகர் பகுதியில் புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைச்சர் நேரு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்தார். அப்போது, பீம நகர் ஹவுசிங் போர்டு பகுதியில் நான்கு ஆண்டுகளுக்கு முன் இடிக்கப்பட்ட வீடுகளில் வசித்த 86 குடும்பங்களுக்கு உடனடியாக வீடு கட்டித் தரக்கோரி பொதுமக்கள் அமைச்சர் நேருவை முற்றுகையிட்டு மனு அளித்தனர். இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

# இனாரா - 26 மாநில அளவிலான இடைக்கல்லூரி - இஎஸ்ஜீ விழிப்புணர்வு விழா



மதுரை, பிப்ரவரி. 17-
மதுரை லேடி டோக் கல்லூரி, சமூக அறிவியல் துறை சார்பில் "நிலையான வளர்ச்சிக்கான தன்னார்வலர்கள் (இஎஸ் ஜீ- சுற்றுச்சூழல், சமூக, ஆளுகை)"என்ற தலைப்பில் இனாரா - 26 மாநில அளவிலான இடைக்கல்லூரி விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவில், சிறப்பு விருந்தினராக அல் அமீன் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், ஷேக் நபி கலந்து கொண்டு, தன்னார்வ சேவையின் மாற்றுத் திறன் குறித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொண்டு நிலைத்த வளர்ச்சி மற்றும் இளைஞர் தன்னார்வத்தின் முக்கியத்துவம் குறித்து தங்கள் கருத்துகளை பகிர்ந்தனர். இவ்விழாவில் குறும்படம், புகைப்படம், திடீர் பேச்சு, கலாச்சார நிகழ்ச்சிகள் உள்ளிட்ட 14 போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் நிலைத்த வளர்ச்சி இலக்குகள், காலநிலை மாற்றம் மற்றும் நல்லாட்சியின் அவசியம் குறித்து விழிப்புணர்வை வெளிப்படுத்தினர்.இதில் முதல் சாம்பியன் பட்டத்தை அமெரிக்கன் கல்லூரி பெற்றது. இரண்டாம் இடத்தை தியாகராஜர் கல்லூரி பெற்றது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஷேக் நபி, வெற்றிக் கோப்பைகள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

இந்த நிகழ்வானது இனாரா - 26 விழா மாணவர்களிடையே சமூக பொறுப்பு மற்றும் நிலைத்த வளர்ச்சி சிந்தனையை வளர்க்கும் சிறந்த தளமாக அமைந்திருந்தது. இந்நிகழ்ச்சியில் துறைத் தலைவர் டாக்டர் ஜாய்ஸ் ஜான் மற்றும் கழக ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாகிகள் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

## எழுத்தாளர் தீபன் எழுதிய காகிதம் பத்தும் செய்யும் புத்தகம் வெளியீட்டு விழா



திருவள்ளூர், பிப்ரவரி. 18-
திருவள்ளூரில் எழுத்தாளர் புட்லூர் சு.தீபன் எழுதிய காகிதம் பத்தும் செய்யும் என்ற புத்தக நூல் வெளியீட்டு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இந்த நூலினை தீபனின் பெற்றோர்கள் சுகுமார், பார்வதி ஆகியோர் புத்தகத்தை வெளியிட, இதனை முன்னாள் நகர் மன்றத் தலைவர் பொன் பாண்டியன், மற்றும் தொழிலதிபர் பாலமுருகன், ரோட்டரி சங்க தலைவர் பாலாஜி, ஞான வித்யாலயா பள்ளி தாளாளர் லாலு, கராத்தே மாஸ்டர் ரவி, விஜயராகவன், மருத்துவர்கள் டாக்டர். ஜெகதீஷ்குமார், டாக்டர். விஜயராஜ், சிவ சுப்பிரமணியம், டி.ஆர்.பி.சி.சி. முன்னாள் ஆசிரியர்கள், மற்றும் பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## முதுகுளத்தூர் அருகே சோனை பிரியன் கோட்டை கிராமத்தில் மூன்றாம் ஆண்டு வடமாடு மஞ்சுவிரட்டு



முதுகுளத்தூர், பிப்ரவரி. 18-
முதுகுளத்தூர் அருகே சோனை பிரியன் கோட்டை கிராமத்தில் மூன்றாம் ஆண்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டி நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் தாலுகா சோனை பிரியன் கோட்டை கிராமத்தில் 13ஆம் ஆண்டு மஹாசிவராத்திரி திருவிழா மற்றும் 3 ஆம் ஆண்டு வடமாடு மஞ்சுவிரட்டு போட்டியும் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

இதில் தமிழகம் முழுவதும் உள்ள பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்த காளைகள் பங்குபெற்றன மாடுபிடி வீரர்களால் பிடிக்க முடியாத காளைகளுக்கு காளைகளின் பரிசு உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டன. காளைகளை பிடித்தமாடுபிடி வீரர்களுக்கு ரொக்கப் பரிசுகள் விழா கமிட்டியின் சார்பில் வழங்கப்பட்டது

## திருப்புவனம் பகுதிகளில் நாளை மின் தடை



திருப்புவனம், பிப்.18-
சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் செயற்பொறியாளர். (பொ) மானாமதுரை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

திருப்புவனம் , நெல்முடிக்கரை, பொட்டபாளையம் மற்றும் திருப்பாசேத்தி ஆகிய துணை மின் நிலையங்களில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் நாளைய தினம் வியாழக்கிழமை 19.02.26 காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை கீழ்க்கண்ட பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது. அந்த வகையில் திருப்புவனம், புதூர், பழையூர், செல்லப்பனேந்தல், லாடனேந்தல், பிரமனூர், அல்லிநகரம், சொக்கநாதிருப்பு, கீழராங்கியம், மேலராங்கியம்,வயல்சேரி, கலியாந்தூர், மேலவெள்ளூர்,கீழவெள்ளூர், மாங்குடி,

அம்பலத்தடி, மணலூர், அகரம், ஒத்தவீடு, மடப்புரம். அதிகரை, வடகரை, பூவந்தி, பொட்டபாளையம், புலியூர், கொந்தகை, கீழடி, சொட்டதட்டி, சாயனாபுரம், கரிசல்குளம், காஞ்சிரங்குளம்,முக்குடி, செங்குளம், திருப்பாசேத்தி, பழையனூர், மாரநாடு தஞ்சாகூர் ஆவரங்காடு,

மேலச்சொரிக்குளம், வெள்ளிக்குறிச்சி,முதுவந்திடல் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கண்டவாறு மாதாந்திர பணிகள் மேற்கொள்ள இருப்பதால் மின் விநியோகம் இருக்காது என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருச்சி அருகே நெய்குளத்தில் போதை ஆசாமி ஓட்டிய டிராக்டரால் 70 ஆடுகள் பலி

திருச்சி பிப்ரவரி. 18–
**திருச்சி மாவட்டம் நெய்குளம் கிராமத்தில் மேய்ச்சலுக்கு சென்ற ஆடுகள் மீது டிராக்டர் மோதி 70 ஆடுகள் பலியாயின, தச்சங்குறிச்சியைச் சேர்ந்த சிவக்குமார் என்பவர் தனது 250 ஆடுகளை நெய்குளம் கிராமத்தில் மேய்ச்சலுக்காக ஓட்டிச் சென்ற போது, கரும்பு ஏற்றிக் கொண்டு வந்த டிராக்டர் ஒன்று ஆட்டு மந்தைக்குள் புகுந்தது. இதில் 70 ஆடுகள் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன. மேலும் 20 ஆடுகள் பலத்த காயமடைந்தன. போதையில் டிராக்டரை ஓட்டி வந்த ஓட்டுநர் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், அவரை காவல் துறையினர் தேடி வருகின்றனர்.**

# கீழக்கரை முஹம்மது சதக் பாலிடெக்னிக் கல்லூரியில் இரத்ததான முகாம் !



கீழக்கரை, பிப். 18-
இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை முஹம்மது சதக் பாலிடெக்னிக் கல்லூரியின், நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை தரைப்படை பிரிவு மற்றும் கடற்படை பிரிவு சார்பாக இரத்த தான முகாம் நடைபெற்றது. இராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கிக்கு மாணவர்கள் தன்னார்வமாக இரத்ததானம் வழங்கினர். இரத்ததான முகாம் துவக்க விழாவில் கல்லூரி முதல்வர் சேக் தாவூத் தலைமை வகித்தார், மருத்துவர்கள் ராசிக்தீன், மணிமொழி, சுவேதினி மற்றும் துணைமுதல்வர் கணேஷ்குமார், துறைத் தலைவர்கள் பாலசுப்பிரமணியன் கோவிந்தன், செந்தில் ராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமிற்கான ஏற்பாடுகளை நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர் ராஜேஸ்கண்ணா தேசிய மாணவர் படை அலுவலர் வினோத், மருதாச்சலமூர்த்தி மற்றும் வேல்முருகன் செய்திருந்தனர்.

# அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி !



திருப்பூர், பிப்ரவரி. 18-
தமிழ்நாடு அரசு, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் பள்ளிகளில் மேல்நிலைப் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு பேருதவியாக இருக்கிறது. நடப்பு ஆண்டுக்கான இலவச மிதிவண்டி வழங்கும் திட்டத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்ததை தொடர்ந்து நஞ்சப்பா நகரவை.ஆண்கள் மேல் நிலைப்பள்ளியில்.மாணவர்களுக்கு. விலையில்லா மிதிவண்டி வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் பள்ளி தலைமை ஆசிரியர் கர்ணன் மற்றும் தனியார் பள்ளி. தலைமையாளர் மணிமாறன். , மாமன்ற உறுப்பினர் 36 வது வார்டு திவாகர். மற்றும் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களுக்கு விலையில்லா. மிதிவண்டி வழங்கினார்.

# தெங்கம்புதூர் அருகே கொத்தனார் தூக்கு போட்டு தற்கொலை

சுசீந்திரம்.பிப்.18–
**தெங்கம்புதூர் அருகே கீழபுத்தளம் பகுதியை சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் வயது 37, கொத்தனார். இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. தந்தை– தாயார் இறந்து விட்டதையடுத்து பாலகிருஷ்ணன் அவரது சகோதரி சுமதி வீட்டில் தங்கி வேலைக்கு சென்று வந்தார். திருமணம் ஆகாத மனவிரக்தியில் இருந்த பாலகிருஷ்ணன் குடிப்பழக்கத்திற்கு ஆளானார். சம்பவத்தன்று சுமதி வீட்டில் இருந்து வெளியே மீன் கடைக்கு சென்றிருந்தார். அப்போது அவர் வீட்டுக்கு திரும்பி வந்து பார்த்தபோது பாலகிருஷ்ணன் ஓட்டு வீட்டில் படுக்கையறையில் பணம் கம்பில் கயிற்றால் தூக்கில் பிணமாக தொங்கினார். இது குறித்து சுசீந்திரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.**

**போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தூக்கில் பிணமாக தொங்கிய பாலகிருஷ்ணன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து சுமதி கொடுத்த புகாரின் பேரில் சுசீந்திரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.**

# பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த விவசாய அணியின் மாநில திட்டக்குழு பொறுப்பாளர் அசோகன் தவெக கட்சியில் ஐக்கியமானர்

## தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் வரவேற்பு



கிருஷ்ணகிரி, பிப்.18-
பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்த விவசாய அணியின் மாநில திட்டக்குழு பொறுப்பாளர் அசோகன் தவெக கட்சியில் ஐக்கியமானர். அவரை தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் வரவேற்றார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூரை சேர்ந்தவர் அசோகன் இவர் பாரதிய ஜனதா கட்சியில் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு முக்கிய பதவிகளை வகித்து வந்த இவர் இரண்டு முறை பர்கூர் சட்டமன்ற தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி சார்பிலும் ஒரு முறை சுயோட்சையாகவும் போட்டியிலுள்ளார்.

தற்போது இவர் பாரதிய ஜனதா கட்சியில் விவசாய அணியின் மாநில திட்டக்குழு பொறுப்பாளராக உள்ள இவர் அண்மைகாலமாக பாரதிய ஜனதா கட்சியின் செயல்பாட்டினால் விரக்தியில் இருந்து வந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அசோகன், பாரதிய ஜனதா கட்சியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தவெக கட்சியின் செயலாளர் முரளி விஜய் தலையில் தவெக கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் முன்னிலையில் தவெக கட்சியில் தன்னை இணைத்துக்கொண்டு கொண்டார்.

பாரதிய ஜனதா கட்சியில் புதியதாக இணைந்த அசோகனுக்கு பொன்னாடை அணிவித்து வரவேற்றதோடு உடனடியாக தவெக கட்சி உறுப்பினர் அடையாள அட்டையினையும் செங்கோட்டையன் வழங்கினார்.

# புதுக்கடை அருகே பூட்டி இருந்த வீட்டை உடைத்து பணம் பொருட்கள் திருட்டு !

புதுக்கடை, பிப். 18 -
புதுக்கடை அருகே கீழ்குளம் பகுதியை சேர்ந்தவர் செல்வன்சன். இவர் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். இவருக்கு மனைவி ஜேனட் புஷ்பலதா (49) என்ற மனைவியும் ஒரு மகளும் ஊரில் உள்ளனர்.

சம்பவ தினம் ஜேனட் புஷ்பலதா தனது மகளுடன் தனது தாயார் வீட்டிற்கு சென்று, அங்கு இரவு தங்கி உள்ளார். மறுநாள் காலை வீட்டுக்கு வந்தபோது, வீட்டின் முன்பக்க உதவு உடைக்கப்பட்டு கிடந்தது. இதை கண்டு அதிர்ச்சி அடைந்த அவர் வீட்டில் உள்ளே சென்று பார்த்தபோது, அங்கு பீரோவில் வைத்திருந்த ரொக்க பணம் ரூ 20 ஆயிரம் மற்றும் உண்டியலில் இருந்த ரூபாய் 15 ஆயிரம், மேலும் 3000 ரூபாய் மதிப்புள்ள எட்டு கை கடிகாரங்கள் என மொத்தம் 38 ஆயிரம் மதிப்பில் திருட்டுப் போயிருந்தது.

இது குறித்து ஜேனட் புஷ்பலதா புதுக்கடை போலீசில் புகார் செய்தார். போலீசார் சம்பவ இடம் சென்று பார்வையிட்டு வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# மீனவ இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 50 அம்ச தேர்தல் அறிக்கை

## தேங்காப்பட்டணத்தில் வைத்து வெளியிட்டனர்



நாகர்கோவில், பிப். 18-

கன்னியாகுமரி மாவட்ட மீனவ மீனவ இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் மீனவர்களின் வாழ்வாதாரம், பாதுகாப்பு மற்றும் அரசியல் உரிமைகளை வலியுறுத்தி 50 முக்கிய கோரிக்கைகள் அடங்கிய விரிவான தேர்தல் அறிக்கை நேற்று தேங்காப்பட்டணத்தில் வைத்து வெளியிட்டனர். அதில் மண்டல் கமிஷன் பரிந்துரைகள் அடிப்படையாகக் கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பாரம்பரியமாக கடல் தொழில் செய்து வரும் மீனவர்களை மண்டல் கமிஷன் பரிந்துரைப்படி பழங்குடியினர் (எஸ்டி)பட்டியலில் சேர்க்க மத்திய அரசின் பழங்குடியினர் விவகார அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய கடற்கரையை எல்லையாக கொண்டு சட்டமன்ற தொகுதிகளை மறுசீரமைப்பு செய்ய வேண்டும். 1979 ஆம் ஆண்டு வரை இருந்த போல கடற்கரை கிராமங்களை பேரூராட்சி மற்றும் நகராட்சியுடன் இணைப்பதை தவிர்த்து, மீண்டும் தனித்தனி ஊராட்சிகளாக மாற்ற வேண்டும். கடலில் விபத்துக்குள்ளாகும் மீனவர்களை மீட்க செயற்கைக்கோள் வசதியுடன் கூடிய கடல் ஆம்புலன்ஸ் மற்றும் ஹெலிகாப்டர் மீட்பு தளங்களை உடனடியாக அமைக்க வேண்டும், கேரள பாணியில் பிரத்தியேக மீனவர் மீட்பு குழுக்களை உருவாக்க வேண்டும். நடுக்கடலில் பழுதாகும் படகுகளை மீட்க அரசு சார்பில் இழுவை படகு வசதி செய்து தர வேண்டும்.

குமரி மாவட்டத்தில் கதிர்வீச்சு பாதிப்பால் புற்றுநோய் அதிகரித்து வருவதால் திருவனந்தபுரத்தில் உள்ளது போன்ற நவீன புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தை குமரியில் அமைக்க வேண்டும். கதிர்வீச்சு மற்றும் கடல் அரிப்பு காரணமாக மணவாளக்குறிச்சி இந்திய அரிய மணல் ஆலை அப்புறப்படுத்த வேண்டும். மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை பறிக்கும் நீல பொருளாதாரத் திட்டம் மற்றும் சாகர்மாலா திட்டங்களை கைவிட வேண்டும். ஆழ்கடலில் மீன்பிடி ஒழுங்குமுறை விதிகளை ரத்து செய்து, பாரம்பரிய மீனவர்களின் கடற்பரப்பு உரிமையை உறுதி செய்ய வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

# தருமபுரி பழைய புறநகர் பேருந்து நிலையத்தில் வியாபாரிகள் கடையடைப்பு போராட்டம் - ஆட்சியரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்



தருமபுரி, பிப்ரவரி. 18-

தருமபுரி பழைய புறநகர் பேருந்து நிலையத்தில் வியாபாரிகள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கோரிக்கை மனுவை வழங்கினார்கள். தருமபுரி அருகே சோகத்தூர் ஏ. ரெட்டி அள்ளி பகுதியில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் தனியார் பங்களிப்புடன் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையம் கடந்த ஐந்தாம் தேதி திறக்கப்பட்ட நிலையில், பழைய புறநகர் பேருந்து நிலையத்தில் இருந்து அனைத்து பேருந்துகளும் புதிய பேருந்து நிலையத்திற்கு மாற்றப்பட்டது. திடீரென மாற்றப்பட்டதால் தருமபுரி நகரில் போக்குவரத்து நெரிச்சல் ஏற்பட்டது. மேலும் பழைய புறநகர் பேருந்து நிலையத்தில் கடைகள் வைத்திருக்கும் வியாபாரிகள் இந்த பேருந்து நிலையம் மாற்றத்திற்கு கடும் கண்டனம் தெரிவித்து பல்வேறு கட்ட போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் பல்வேறு கட்சியினர் வியாபாரிகளுக்கு ஆதரவு தெரிவித்தனர். இந்த நிலையில் பழைய புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து மீண்டும் அனைத்து பேருந்துகளும் புறப்படும் வகையில் மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், புதிய பஸ் நிலையத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் தருமபுரி நகரில் உள்ள புறநகர் மற்றும் நகரப் பேருந்து நிலையங்களில் வியாபாரிகள் கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்தின் காரணமாக இரண்டு பேருந்து நிலையத்தில் இருக்கும் அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. மேலும் பேருந்து நிலையத்தை சுற்றி உள்ள பெரும்பாலும் கடைகளும் அடைக்கப்பட்டிருந்தன. இதனால் பேருந்து நிலையத்துக்கு வந்த பொதுமக்கள் மற்றும் பயணிகள் பாதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் தருமபுரி ராஜகோபால் கவுண்டர் புறநகர் பேருந்து நிலைய வியாபாரிகள் சங்கம் சார்பில் சங்க நிர்வாகிகள் மற்றும் வியாபாரிகள் ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கோரிக்கை மனு கொடுத்தனர் . அந்த மனுவில் தருமபுரி புறநகர் பேருந்து நிலையத்தில் கடந்த 45 ஆண்டுகளாக கடைகளுக்கு முறையான வாடகை செலுத்தி வியாபாரம் செய்து வருகிறோம். எந்தவித முன்னறிவிப்பும் இன்றி புதிய பேருந்து நிலையம் திறக்கப்பட்டதால், எங்களது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே பழைய படி பழைய புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து பேருந்துகளும் இயக்கும் வகையில் மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.



**தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, காணொளிக்காட்சி வாயிலாக, உயர்கல்வித்துறை மூலம் பர்கூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், பெருந்தலைவர் காமராஜர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம் 2025–26 ன் கீழ், ரூ.1 கோடியே 54 இலட்சம் மதிப்பில் இரண்டு பல்நோக்கு அரங்கு கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். அதனைத்தொடர்ந்து, பர்கூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில், ரூ.1 கோடியே 54 இலட்சம் மதிப்பில் இரண்டு பல்நோக்கு அரங்குகள் கட்டுமான பணிகளை பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் .தே.மதியழகன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான் ஆகியோர் பூமி பூஜை செய்து பணிகளை துவக்கி வைத்தனர். உடன், பர்கூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி முதல்வர் .பி.கே.முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.**






**தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தின் அருகில் இருந்து நெடுஞ்சாலைதுறை மூலம் புதிதாக அமைக்கப்படவுள்ள திருச்செந்தூர் முதல் வள்ளி குகை வரை செல்லும் புறவழிச் சாலைக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை மாவட்ட ஆட்சியர் .க.இளம்பகவத் பார்வையிட்டார்.**

# ஆறுகாணி அருகே வண்ணாத்திபாறை மலையில் கொழுந்து விட்டு எரியும் காட்டுத் தீ!



விளவங்கோடு, பிப்ரவரி. 17-

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த இரு மாதங்களாக வறண்ட வானிலேயே நிலவி வந்த நிலையில் ஆறுகாணி, ஒருநூறாம் வயல் அருகே வண்ணாத்திப்பாறை மலையில் கடும் வெப்பம் காரணமாக காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது.இதன் காரணமாக இப்பகுதியில் இருக்கக்கூடிய மூலிகைச் செடிகள், மரங்கள் எரிந்து வருகிறது. காற்றின் வேகம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் காட்டுத் தீ வேகமாக பரவும் அபாயம் உள்ளது. எனவே, காட்டுத்தீ பரவாமல் தடுக்க வனத்துறை அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் நேற்று முன்தினம் கிளாமலையில் இதே போன்ற தீ ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொதிக்கும் எண்ணெயில் நடு சாலையில் சிப்ஸ் கடை சாலை ஆக்கிரமிப்புகளை கண்டுகொள்ளாத நெடுஞ்சாலைதுறை : 200க்கும் மேற்பட்ட கிராம மக்கள் அவதி



விளாத்திகுளம், பிப்ரவரி. 18-

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சுற்றுவட்டாரத்தில் சுமார் 200க்கும் மேற்பட்ட கிராம மக்கள் தங்களின் அன்றாட தேவைகளுக்கும் மருத்துவ தேவைகளுக்கும், அதேபோல் பள்ளி கல்லூரி மாணவர்கள் மாணவ,மாணவிகள் விளாத்திகுளம் நகர் பகுதியில் வசிக்கும் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் என தினமும் ஆயிரக்கணக்கானோர் விளாத்திகுளத்திற்கு வந்து கடந்து செல்ல வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இந்நிலையில் விளாத்திகுளம் நகர் பகுதிகளான மதுரை சாலை,எட்டையாபுரம் சாலை வேம்பார் சாலை ஆகிய பகுதிகளில் சாலையில் இருபுறமும் வியாபாரிகள் கடைகளை அமைத்து ஆக்கிரமித்து இருப்பதால், ஒரு அவசர காலங்களில் 108 ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் தீயணைப்பு வாகனங்கள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது.

கடந்த 2013 ஆம் ஆண்டு விளாத்திகுளம் நகர் பகுதியில் உள்ள நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற நெடுஞ்சாலைத் துறையினர் முன் வந்த போது, ஒரு சில அரசியல்வாதியின் அழுத்தம் காரணமாக ஆக்கிரமிபை அகற்றும் பணி நிறுத்தி வைக்கப்பட்டது.

விளாத்திகுளம் மற்றும் விளாத்திகுளம் சுற்றுவட்டார பகுதிகளில் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களின் எண்ணிக்கை கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது. அதேபோல் கடந்த 10 ஆண்டுகளை காட்டிலும் தற்போது விளாத்திகுளம் நகர் பகுதியில் ஆக்கிரமிப்புக்கு பஞ்சம் இல்லாமல் நகை கடை, மற்றும் ஜவுளிக்கடை, சிப்ஸ் கடை என பெரும்பாலான கடைகள் சாலைகளை இருபுறமும் ஆக்கிரமித்து இருப்பதால் தினமும் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது, காலையில் உரிய நேரத்தில் பள்ளி, கல்லூரி வாகனங்கள் பள்ளிக்கு செல்ல முடியாமலும், அன்றாட வேலைக்கு செல்பவர்கள் காலை மற்றும் மாலை நேரங்களில் உரிய இடத்திற்கு செல்ல முடியாமலும் தவித்து வருகின்றனர்.

அதேபோல் மதுரை சாலையில் உள்ள ஒரு சிப்ஸ் கடையில் சாலையை ஆக்கிரமித்து கொதிக்கும் எண்ணெயில் சிப்ஸ் போட்டு வருகின்றனர், நிலை தடுமாறி இருசக்கர வாகனத்தில் மற்றும் நடந்து செல்வோர் மீது கொதிக்கும் என்னை விழுந்து விபத்து ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது.

அதேபோல் விளாத்திகுளம் பேருந்து நிலைய நுழைவு வாயிலின் இருபுறமும் பழக்கடைகள் ஆக்கிரமித்து, பேருந்து உள்ளே செல்ல முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. நெடுஞ்சாலைத் துறை நெடுஞ்சாலையை எப்படி ஆக்கிரமித்து கடைகளை எப்படி அமைக்காலம் என்பது குறித்து தமிழகத்தில் உள்ள மற்ற வியாபாரிகள் விளாத்திகுளம் வியாபாரிகளிடம் பயிற்சி எடுக்கலாம்.

விளாத்திகுளம் பகுதி நெடுஞ்சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சாலையின் இருபுறமும் (பிளாட்பார்ம்) நடைமேடை அமைத்து தர வேண்டும் என்று விளாத்திகுளம் பகுதி மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# நிலக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் லேப்டாப் வழங்க கோரி திடீர் போராட்டம்

## போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வந்த தவெக நிர்வாகிகளை காவல்துறையினர் வாகனத்தில் ஏற்றி சென்றதால் பரபரப்பு!!



நிலக்கோட்டை,பிப்.18-

நிலக்கோட்டையில் அரசு மகளிர் கலைக்கல்லூரி மாணவிகள் லேப்டாப் வழங்க கோரி,திடீர் போராட்டத்தில் ஈடுபட்டனர்,

போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வந்த,தமிழக வெற்றி கழக நிர்வாகிகளை காவல்துறையினர் வாகனத்தில் ஏற்றி சென்ற சம்பவத்தால், பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் அரசு மகளிர் கலைக் கல்லூரி உள்ளது. இக்கல்லூரியில் சுமார் 3 ஆயிரம் மாணவிகள் படித்து வருகின்றனர்.

இந்நிலையில்,நிலக்கோட்டை மகளிர் கலைக்கல்லூரியில் படிக்கும் இளநிலை மற்றும் முதுநிலை 3-ம் ஆண்டு மாணவிகளுக்கு மட்டும் லேப்டாப் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால்,முதுநிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவிகள் தங்களுக்கு லேப்டாப் வழங்க கோரி கல்லூரி முன்பு, நிலக்கோட்டை-வத்தலகுண்டு சாலையில் திடீர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மாணவிகளின் போராட்டத்தால், கல்லூரி முன்பு பலத்த காவல்துறை பாதுகாப்பு போடப்பட்டுள்ள நிலையில், மாணவிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வந்த தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் அங்கு வந்தனர்.

அப்போது,வத்தலகுண்டு காவல் ஆய்வாளர் கௌதமன் மற்றும் காவல் துறையினர் கல்லூரி மாணவிகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்க வந்த தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் அய்யனார், நிலக்கோட்டை பேரூர் இணைச்செயலாளர் பிரேம், தமிழக வெற்றிக்கழக ஒன்றி நிர்வாகி ஸ்ரீவாசன் உள்ளிட்ட ஐந்து பேரை காவல்துறை வாகனத்தில் ஏற்றி வத்தலகுண்டு காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது, தமிழக வெற்றி கழக. நிர்வாகிகளுக்கும், காவல்துறையினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இந்த சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டு வரும் நிலையில், தங்களுக்கு லேப்டாப் வழங்க கோரி தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மாணவிகள் லேப்டாப் வழங்கவில்லை என்றால், வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் எந்த கட்சிக்கும் வாக்களிக்க மாட்டோம் எனவும்,தேர்தலை புறக்கணிக்க போவதாகவும் மாணவிகள் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்

# குமரி வனத்துறை சார்பில் நிலம் வாழ் பறவைகள் கணக்கெடுக்கும் பணி!




நாகர்கோவில், பிப்.18-

கன்னியாகுமரி மாவட்ட வன அலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் முனைவர் அ.அன்பு வழிகாட்டுதலின்படி உதவி வன பாதுகாவலர் மற்றும் உதவி இயக்குநர் ஸ்ரீ வல்சன் தலைமையில் கன்னியாகுமரி மாவட்டம் முழுவதும் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 இடங்களில் நேச்சர் பவுண்டேஷன் வினோத் மற்றும் பூதப்பாண்டி வனச்சரக அலுவலர் அன்பழகன், இளம் ஆய்வாளர் சிவகுமார் உட்பட 75 தன்னார்வலர்கள் மற்றும் பறவை ஆய்வாளர்கள் உடன் 55 வனப் பணியாளர்கள் மொத்தம் 130 பேர் குழுக்களாக 2026 ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிலவாழ் பறவைகள் கணக்கெடுப்பு பணி மேற்கொண்டனர்.

இந்த கணக்கெடுப்பில் பச்சைக்கிளி, மைனா, குயில், கௌதாரி, மரங்கொத்தி, செம்பருந்து, கரும்பருந்து, இருவாச்சி, பச்சை குக்குறுவான், கருஞ்சிட்டு தோட்டக்கள்ளன், செம்புவால் ஈப்பிடிப்பான், பாம்பு திண்ணி கழுகு, குயில் கீச்சான், வெண் மார்பு மீன் கொத்தி, கருந்தலை மாங்குயில், சூரை குருவி, சின்ன இரவாடி, கள்ளப் பருந்து, பச்சை பஞ்சுருட்டான், துடுப்பு வால் கரிச்சான் போன்ற 100 ற்கும் மேற்பட்ட இனப்பறவைகள் காணப்பட்டன. இந்த கணக்கெடுப்பில் கலந்துகொண்ட தன்னார்வலர்களுக்கு வனத்துறை சார்பாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

பறவைகள் கணக்கெப்பின் முழு விவரம் ஆய்வின் முடிவில் பின்னர் தெரிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# குமரியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு போட்டிகளில் வென்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் - போலீஸ் எஸ் பி வழங்கினார்




**நாகர்கோவில், பிப்.18–**

**கன்னியாகுமரி மாவட்டத்தில் சாலை விபத்துக்களை தடுக்க மாவட்ட போலீஸ் காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் உத்தரவின் பேரில் நோ ஹெல்மெட், நோ என்ட்ரி, பள்ளி கல்லூரிகளில் சாலை பாதுகாப்பு கமிட்டி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக குமரி மாவட்ட காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு தொடர்பாக பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கான ரீல்ஸ், ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் 2000 மாணவ மாணவிகள் ஓவியங்களை வரைந்து சமர்ப்பித்தனர். 40 மாணவ மாணவிகள் ரீல்ஸ் வெளியிட்டு இருந்தனர்.**

**இந்த ஓவியங்கள் மட்டும் ரீல்ஸ் அனைத்தும் ஆயுதப்படை மைதானத்தில் பொதுமக்களின் பார்வைக்காக 3 நாள் கண்காட்சியாக நடத்தப்பட்டது. நாள்தோறும் ஆயிரத்துக்கும் மேற்பட்டமான மாணவிகள் பொதுமக்கள் வந்து பார்வையிட்டனர்.**

**இந்த போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு எஸ் பி ஸ்டாலின் பரிசுத்தொகை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இதில் ஓவியப்போட்டில் தேரிவிளையைச் சேர்ந்த கல்லூரி மாணவி அக்ஷயா முதல் பரிசை பெற்றார். மேலும் மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி எஸ்.பி ஸ்டாலின் பேசியதாவது:–**

**சாலை விபத்துகளை குறைக்க நமது நடவடிக்கைகளில் மாற்றம் வர வேண்டும். அதற்கு ஏற்ப பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் இடையே விபத்து இல்லாத மாற்றத்தை உருவாக்க இந்த போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் பங்கேற்ற அனைவருக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**மேலும் சாலை விதிகளை அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும். ஹெல்மெட், சீட்டு பெல்ட் அவசியம் அணிய வேண்டும். அதிக வேகம் கூடாது. செல்போன் டிரைவிங், குடிபோதையில் டிரைவிங் தவிர்க்கப்பட வேண்டும். 18 வயது நிரம்பி லைசென்ஸ் பெற்ற பின்னரே வாகனங்களை ஓட்ட வேண்டும். இந்த மாற்றத்தை பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் கொண்டு வர வேண்டும் என கூறினார்.**

# 70-வது தென்னிந்திய ஃபிலிம்பேர் விருதுகளுக்கான பரிந்துரைகள் அறிவிப்பு

சென்னை, பிப்.18–

2024-ஆம் ஆண்டில் வெளியான மலையாளம், கன்னடம், தமிழ் மற்றும் தெலுங்கு திரைப்படங்களின் சிறந்த திறமைகளையும் கலைத் திறனையும் கௌரவிக்கும் வகையில், கேரளா சுற்றுலாத் துறையுடன் இணைந்து வழங்கப்படும் 70-ஆவது தென்னிந்திய ஃபிலிம்பேர் விருதுகளுக்கான பரிந்துரைகளை ஃபிலிம்பேர் நிறுவனம் அறிவித்துள்ளது.

இவ்விருது வழங்கும் விழா 2026 பிப்ரவரி 21 அன்று கொச்சியில் உள்ள அட்லக்ஸ் சர்வதேச மாநாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்த் திரையுலகைப் பொறுத்தவரை, அமரன் திரைப்படம் 10 பரிந்துரைகளுடன் முன்னணியில் இருக்க, அதனைத் தொடர்ந்து லப்பர் பந்து மற்றும் மெய்யழகன் ஆகிய படங்கள் இடம்பெற்றுள்ளன. சிறந்த முதன்மை நடிகருக்கான பிரிவில் அரவிந்த் சாமி, அட்டகத்தி தினேஷ், விக்ரம், தனுஷ், சிவகார்த்திகேயன், சூரி மற்றும் விஜய் சேதுபதி ஆகியோர் தங்களது சிறப்பான நடிப்பிற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். சிறந்த முதன்மை நடிகைக்கான பிரிவில் சாய் பல்லவி, அன்னா பென், கீர்த்தி சுரேஷ், சிம்ரன், ஸ்ரீ கௌரி பிரியா மற்றும் ஊர்வசி ஆகியோர் பரிந்துரைப் பட்டியலில் உள்ளனர்.

மலையாளத்தில் ஆடுஜீவிதம் திரைப்படம் 8 பிரிவுகளில் பரிந்துரைக்கப்பட்டு முதலிடத்தில் உள்ளது. சிறந்த திரைப்படத்திற்கான பிரிவில் ஆட்டம், ஆவேசம், பிரமயுகம், மஞ்சுமெல் பாய்ஸ், ஆடுஜீவிதம், பிரேமலு, உள்ளொழுக்கு, கிஷ்கிந்தா காண்டம் மற்றும் பிராயு நினைச்செல்லாம் ஆகிய படங்கள் போட்டியிடுகின்றன.

சிறந்த நடிகருக்கான பிரிவில் மம்மூட்டி, பகத் பாசில், பிருத்விராஜ், டோவினோ தாமஸ், ஆசிப் அலி மற்றும் பாசில் ஜோசப் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இது சிறந்த ஆண் கதாபாத்திரங்கள் நிறைந்த ஒரு ஆண்டாக அமைந்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. அதே போல் சிறந்த நடிகைக்கான பிரிவில் மமிதா பைஜு, பார்வதி திருவோது, ஊர்வசி, நஸ்ரியா நசீம், திவ்யா பிரபா, கனி குஸ்ருதி மற்றும் ஜரின் ஷிகாப் ஆகியோர் இடம்பெற்றுள்ள நிலையில், இது பெண் கதாபாத்திரங்களை மையமாகக் கொண்ட சிறந்த நடிப்பின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது.

அதேபோல கன்னடம், தெலுங்கு ஆகிய மொழி படங்களுக்கும் பிலிம்ஃபேர் விருதுகள் வழங்கப்படுகின்றன

இவ்விருதுகள் குறித்து கேரள அரசின் பொதுப்பணி மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. பி.ஏ. முகமது ரியாஸ் கூறுகையில், "தென்னிந்தியத் திரையுலகின் சிறப்பைக் கொண்டாடும் வரலாற்றுச் சிறப்புமிக்க 70-ஆவது ஃபிலிம்பேர் விருதுகள் தெற்கு விழாவை நடத்துவதில் கேரளா பெருமிதம் கொள்கிறது. பிரமிக்க வைக்கும் இயற்கை நிலப்பரப்புகள், வளமான கலாச்சார பாரம்பரியம் மற்றும் கதை சொல்லும் இயல்புடன் கொண்டுள்ள ஆழமான பிணைப்பு ஆகியவற்றால், எமது மாநிலம் நீண்டகாலமாகத் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்குப் பிடித்தமான இடமாக இருந்து வருகிறது. ஃபிலிம்பேர் விருதுகளை நடத்துவது சினிமாவுடனான கேரளாவின் நீடித்த உறவைப் பிரதிபலிப்பதோடு, திரைப்பட சுற்றுலா மற்றும் ஆக்கப்பூர்வமான பரிமாற்றங்களுக்கான துடிப்பான மையமாக மாநிலத்தை மேம்படுத்தும்" என்று தெரிவித்தார்.

# தென்காசியில் நலத்திட்ட உதவிகள் : கலெக்டர் கமல்கிஷோர் வழங்கினார்



தென்காசி, பிப்.18–

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, முஸ்லீம் மற்றும் கிறிஸ்தவ பெண்கள் உதவும் சங்கத்தின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தலைமையில் , தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணிஸ்ரீ குமார், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் மரு.சதன் திருமலைக்குமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க தென்காசி மாவட்டத்தில் முஸ்லீம் பெண்கள் உதவும் சங்கம் மற்றும் கிறிஸ்தவ பெண்கள் உதவும் சங்கத்திற்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முஸ்லீம் பெண்கள் உதவும் சங்கம் மற்றும் கிறிஸ்வத சங்கம் மூலம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. சமுதாயத்திற்கு பெண்கள் முதுகெலும்பு போன்றவர்கள். பெண்கள் முன்னேறினால் தான் சமுதாயம் முன்னேறும். சமூக, பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ள இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ பெண்களை ஊக்குவித்து அவர்களுக்கு நிரந்தரமான தொழில், வருமானம் கிடைக்கும் வகையில் தொழில் வாய்ப்பு அளிக்கப்பட்டு நல்ல வருமானம் கிடைக்கும் வகையில் முஸ்லீம் பெண்கள் உதவும் சங்கம் மற்றும் கிறிஸ்தவ பெண்கள் உதவும் சங்கம் செயல்பட்டு வருகிறது. சமூக சிந்தனையோடு சாதி, மத வேறுபாடு இன்றி அனைவரும் ஏழைகள் நலனில் அக்கறை கொண்டு செயல்பட வேண்டும்.

மேலும், இன்றைய தினம் முஸ்லீம் பெண்கள் உதவும் சங்கத்தின் மூலம் 119 பயனாளிகளுக்கு ரூ.10,31,200/- மதிப்பிலான மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்களும், 14 நபர்களுக்கு ரூ.83,300/- மதிப்பிலான மாவு அரைக்கும் இயந்திரங்களும், 18 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ.1,80,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், 88 பயனாளிகளுக்கு சிறு தொழில் உதவித்தொகையாக தலா ரூ.10,000/- வீதம் மொத்தம் ரூ.8,80,000/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் ஆக மொத்தம் 239 பயனாளிகளுக்கு ரூ.21,74,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், கிறிஸ்தவ பெண்கள் உதவும் சங்கத்தின் மூலம் 06 பயனாளிகளுக்கு சிறு தொழில் உதவித்தொகையாக தலா ரூ.10.000 வீதம் மொத்தம் ரூ60,000 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 245 பயனாளிகளுக்கு ரூ.22,34,500/- மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் கமல்கிஷோர் தெரிவித்தார். இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், தென்காசி நகர்மன்ற தலைவர் சாதிர், மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் உதயகிருஷ்ணன், வடகரை பேரூராட்சி தலைவர் ஷேக் தாவூத், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் முத்துராமலிங்கம், முகம்மது சலீம், முகம்மது இஸ்மாயில், மரு. அப்துல் அஜிஸ், பக்கீர் மைதீன், புகாரி மீரா சாகிப், சந்திரா மற்றும் முஸ்லிம், கிறிஸ்தவ சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கடை அருகே நிலப் பிரச்சனை : கோர்ட் உத்தரவின் பேரில் 2 வழக்குகள் பதிவு

புதுக்கடை, பிப். 18–

புதுக்கடை பகுதியில் சொத்து பிரச்சனை சம்மந்தமான 2 வழக்குள் கோர்ட் உத்தரவுபடி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

கீழ்குளம் பகுதியை சேர்ந்தவர் ஆல்வின் ஜோஸ் (30). இவருக்கு இனயம் புத்தன்துறை கிராமத்திற்குட்பட்ட பகுதியில் சொத்து உள்ளது. இந்த நிலத்தின் பாதை சம்பந்தமாக அதே பகுதியை சேர்ந்த பால் ஸ்டீபன் (45) என்பவருடன் பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் 22-ம் தேதி ஆல்வின் ஜோஸ் பணியாளர்கள் மூலம் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார். அப்போது பால ஸ்டீபன் தலைமையில் ஜெய்சன் ( 18), புனிதா (40), வசந்தா ( 50) உள்ளிட்ட 8பேர் கும்பல் சென்று காம்பவுண்ட் சுவரை இடித்து சேதப்படுத்தி, ஆல்வின் ஜோசுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இது குறித்து புதுக்கடை போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காததால், ஆல்வின் ஜோஸ் குழித்துறை நீதிமன்றத்தில் புகார் அளித்தார். நீதிமன்ற உத்தரவின் பேரில் உத்தரவின் பேரில் நேற்று 16-ம் தேதி புதுக்கடை போலீசார் பால் ஸ்டீபன் உள்ளிட்ட எட்டு பேர் மீது வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

இது போன்று தேங்காய் பட்டணம் பகுதியை சேர்ந்தவர் அனீஸ் (30). இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த அருண்(30) என்பவருக்கும் சொத்து சம்பந்தமான பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்த நிலையில் கடந்த 22. 6. 2025 அன்று அருண், சிங் (35), செல்வராஜ் (60) ஆகியோர் சேர்ந்து அனிசை அவரின் நிலத்தில் அத்துமீறி நுழைந்து அறிவாளால் வெட்டியும், அவரது தாயாரை தாயாரையும் தாக்கி காயப்படுத்தி உள்ளனர். இது குறித்தும் புதுக்கடை போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் நடவடிக்கை எடுக்காததால் குழித்துறை நீதிமன்றத்தில் புகார் செய்யப்பட்டது. நீதிமன்ற உத்தரவின் பேரில் புதுக்கடை போலீசார் நேற்று அருண், சிங், செல்வராஜ் உட்பட 3 பேர் மீது வழக்குப்பதிவு செய்து உள்ளனர்.








வேலூர் புதிய பேருந்து நிலையம் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ அங்காளம்மன் ஆலயத்தின் 13 ஆம் ஆண்டு மயான கொள்ளை திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. இவ்விழாவையொட்டி விழா குழு தலைவர் திருமுருகன் ஏற்பாட்டில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. இதனை வேலூர் அமுதா ப்ராப்பர்ட்டீஸ் நிறுவனர் தொழிலதிபர் ஜி.பரத்குமார் கலந்து கொண்டு அன்னதானம் வழங்கி துவக்கி வைத்தார். உடன் விழா குழுவினர்கள் ஞானராஜ் சதீஷ்குமார் தயாநிதி சசிகுமார் மற்றும் சாமுவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சுமார் 5000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டது.

# களியக்காவிளை அருகே இறந்து கிடந்த வாலிபர் வட மாநிலத்தை சார்ந்தவர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைப்பு



களியக்காவிளை, பிப்.18–

களியக்காவிளை அருகே கைதக்குழி பகுதியில் கடந்த 2 நாட்களுக்கு முன் பள்ளத்தில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க வாலிபர் இறந்து கிடந்துள்ளார். இதனை பார்த்த அப்பகுதியினர் களியக்காவிளை போலீசுக்கு தகவல் கொடுத்தனர். போலீசார் சம்பவ இடம் வந்து சடலத்தை கைப்பற்றி விசாரணை நடத்தி வந்தனர். அந்த பகுதி சி.சி.டி.வி காமிரா பதிவுகளை ஆராய்ந்தனர். விசாரணையில் இறந்த வாலிபர் ஜார்கண்டு மாநிலம் டாப்கரா கும்லா பூஜன்கா டிப்பாட்டோலா என்ற இடத்தை சார்ந்த துருஓரான் மகன் திலிப் டிரிக்கி (40 ) என்பது தெரிய வந்தது.

இவர் களியக்காவிளை பகுதியில் தங்கி இருந்து கல் உடைக்கும் தொழில் செய்து வந்துள்ளார். அப்போது சம்பவத்தன்று இரவு கைதக்குழி பகுதி வழியாக நடந்து சென்ற போது தவறி விழுந்து உயிரிழந்துள்ளார் என போலீசார் விசாரணையில் தெரிய வந்துள்ளது. ஆகவே போலீசார் உறவினர்களை வரவழைத்து சடலத்தை ஒப்படைத்தனர். அவர்கள் குழித்துறை மின் மயானத்தில் சடலத்தை எரித்து விட்டு சாம்பலை பெற்றுச் சென்றுள்ளனர்.

# புதுக்கடை அருகே வீட்டில் தவறி விழுந்த முதியவர் உயிரிழப்பு - போலீஸ் வழக்கு

புதுக்கடை, பிப்.18 –

புதுக்கடை அருகே தோட்டவாரம் பகுதியை சேர்ந்தவர் குஞ்சன் ( 85). இவர் சமீபகாரமாக ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டு வந்துள்ளார். சம்பவதினம் வீட்டு முன்பக்கம் நின்று கொண்டிருந்தார். அப்போது திடீரென தலை சுற்றல் ஏற்பட்டு கீழே விழுந்தார். உடனடியாக உறவினர்கள் அவரை மீட்டு தக்கலை அரசு ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு சேர்த்தனர். அங்கிருந்து மீண்டும் உடல் நிலை மோசமானதால் குழித்துறை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

அங்கு பரிசோதித்த டாக்டர்கள் அவரை மேல்சிகிட்சைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினர். அங்கு சிகிச்சையில் இருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது குறித்து அவரது மனைவி பொன்னேசம் என்பவர் புதுக்கடை போலீசில் புகார் அளித்தார்.

போலீசார் வழக்கு பதிவு செய்து முதியவரின் இறப்புக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.



வேலூர் மாவட்டம் திருவலம் அடுத்த மேட்டுப்பாளையம் சேக்கிழார் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ தேவி புற்று பூங்காவனத்தம்மன் ஆலய மயான கொள்ளை திருவிழா பிப்ரவரி 17 செவ்வாயன்று நடைபெற்றது.விழாவில் அம்மனுக்கு அலங்காரம் செய்து பூ ஜோடித்து வீதி வீதியாக ஊர்வலம் வந்தனர். பின்னர் மாலையில் ஆற்றங்கரையில் மயான கொள்ளை விடப்பட்டது. விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக காட்பாடி ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் திருவலம் பேரூராட்சி தலைவர் சாமுண்டீஸ்வரி ரவி மற்றும் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில் அனைவருக்கும் அன்ன அன்னதானம் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை மேட்டுப்பாளையம் சேக்கிழார் பகுதி பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

# சங்கரன்கோவில் இலங்கைத் தமிழர் முகாமில் 32 புதிய வீடுகள் முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொளி வாயிலாக திறந்து வைத்தார்

## ராஜா எம்எல்ஏ, கலெக்டர் கமல் கிஷோர், எம்பி ராணி ஸ்ரீகுமார் பங்கேற்பு!!



சங்கரன்கோவில். பிப்.18–

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் இளைஞர் தமிழர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்ட வீடுகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், எம்பி ராணி ஸ்ரீகுமார், ராஜா எம்எல்ஏ ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலங்கை தமிழர் மறுவாழ்வுத்துறை சார்பில் தென்காசி மாவட்டம் சங்கரன் கோவில் வட்டம் ஆத்தியடி பிள்ளையார் கோவில் இலங்கை தமிழர்கள் குடியிருப்பு பகுதியில் 32 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு முதலமைச்சர் முக ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர், எம்பி ராணி ஸ்ரீகுமார், தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆகியோர் கலந்து கொண்டனர். பின்னர் மாவட்ட கலெக்டர் தெரிவிக்கையில்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி காட்சி வாயிலாக இலங்கை தமிழர் மறுவாழ்வுத்துறை சார்பில் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் ஆத்தியடி பிள்ளையார் கோவில் இலங்கை தமிழர்கள் குடியிருப்பு பகுதியில் ரூ205 கோடி மதிப்பீட்டில் 32 வீடுகள் திறந்து வைத்துள்ளார்கள். மேலும், ரூ.66 இலட்சம் மதிப்பீட்டில் சாலை வசதி, குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என தெரிவித்தார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலா சங்கரபாண்டியன், சங்கரன்கோவில் ஆர்டிஓ அனிதா,சங்கரன்கோவில் நகராட்சி சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ், நகராட்சி கமிஷனர் (பொ)ரவிச்சந்திரன், பொறியாளர் இர்வின்ஜெயராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அருள்செல்வம், மல்லிகா, மற்றும் அரசு அலுவலர்கள் ,இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமை சேர்ந்த பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# மங்கலம் ஊராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், உயர்மின் கோபுர விளக்குகள் திறப்புவிழா!




மங்கலம், பிப்.18–

மங்கலம் ஊராட்சிக்குட்பட்ட காந்திநகர் பகுதியில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் திறப்பு விழா நடைபெற்றது. இதைத்தொடர்ந்து அக்ரஹாரப்புத்தூர் பகுதியில் ஒரு உயர்மின் கோபுர விளக்கு மற்றும் சின்னப்புத்தூர் பகுதியில் ஒரு உயர்மின் கோபுர விளக்கு என மொத்தம் 2 மின்கோபுர விளக்குகள் திறப்புவிழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பல்லடம் சட்டமன்ற உறுப்பினர் எம். எஸ்.எம். ஆனந்தன் எம்.எல்.ஏ., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி திறந்து வைத்தார். நிகழ்ச்சிக்கு திருப்பூர் மேற்கு ஒன்றிய செயலாளர் மங்கலம் சுப்பிரமணியம் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. மாநில விவசாய அணி துணை செயலாளரும், பல்லடம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான கே.பி.பரமசிவம், சிறுபான்மைபிரிவு மாநில துணைச்செயலாளர் மாவட்ட செயலாளர் சிராஜ்தீன், அஸ்கர் அலி, மாவட்ட எம்.ஜி.ஆர். மன்ற துணைச்செயலாளர் பாலசுப்பிரமணியம், மங்கலம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க முன்னாள் துணை த்தலைவர் முத்துக்குமார். மங்கலம் முத்துச்சாமி ஜெயலலிதா பேரவை துணை செயலாளர் ஜெயம் என். மகேந்திரகுமார், திருப்பூர் மேற்கு மாவட்ட மாணவரணி இணைச் செயலாளர் நந்தகுமார். வேட்டுவபாளையம் கிளை செயலாளர் ஆனந்த், ரபிதீன், நாசர்அலி, பத்மநாபன், சுந்தர மூர்த்தி,அஜீத் கோவிந்தன் ,லாரன்ஸ்,கோவிந்தசாமி, துரை மற்றும் பலர் கலந்து காண்டனர்.

# தருமபுரி அங்காளம்மன் கோவில்களில் மயான கொள்ளை திருவிழா!



தருமபுரி, பிப்ரவரி. 18–

தருமபுரியில் உள்ள குமாரசாமிபேட்டை, வெளிப்பட்டைதெரு, அனசாகரம், கடைவிதி மற்றும் அனைத்து அங்காளம்மன் திருக்கோவில்களில் மாசி மாத அமாவாசையை முன்னிட்டு மயான கொள்ளை திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. குமாரசாமிபேட்டையில் உள்ள ஸ்ரீ அங்காளம்மன் திருக்கோவிலில் மயான கொள்ளை திருவிழாவை முன்னிட்டு கொடி ஏற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து சக்தி கரகம் அழைத்தல் ,தீ மிதித்தல், பொங்கல் வைத்தல், பால்குட ஊர்வலம் மற்றும் அருள்மிகு ஸ்ரீ தாண்டவேஸ்வரருக்கும் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மனுக்கும் திருக்கல்யாண வைபவம் வெகு விமர்சையாக நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்வான அருள்மிகு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் பூத வாகனத்தில் மயான கொள்ளை பெரு விழா நடைபெற்றது. இந்த விழாவில் பக்தர்கள் அழகு குத்தியும், விமான அலகில் அந்தரத்தில் தொங்கியபடி கோவிலில் இருந்து மயானம் வரை சென்று நேர்த்திக்கடன் செலுத்தினர்கள். பின்னர் இரவு கண்ணாடி மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் அம்மன் திருவீதி உலா நடைபெற்றது. இந்த விழாவில் தருமபுரி நகரில் உள்ள பக்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அம்மனை வழிபட்டனர். இவ்விழாவிற்கான ஏற்பாட்டினை விழா குழுவினர் மற்றும் 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சிறப்பாக செய்திருந்தனர். அனைவருக்கும் விழா குழுவினர் சார்பில் அன்னதான வழங்கப்பட்டது.

# களியக்காவிளை அருகே மரத்தில் இருந்து தவறி விழுந்து கூலித் தொழிலாளி உயிரிழப்பு

களியக்காவிளை, பிப்.18–

களியக்காவிளை அருகே மேக்கோடு, பனிச்சகுழி பகுதியை சார்ந்தவர் ஜான் றோஸ் மகன் டேவிட்ராஜ், (45). இவர் கூலி வேலை செய்து வந்தார். இவருக்கு திருமணமாகி மனைவி பிள்ளைகள் உள்ளனர்.

இந்நிலையில் இவர் சம்பவத்தன்று புளிய மரத்தில் புளி பறிக்க மரத்தில் ஏறியுள்ளார். அப்போது தவறி விழுந்துள்ளார். அவரை அப்பகுதியினர் மீட்டு பாறசாலை தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். தொடர்ந்து மேல் சிகிட்சைக்காக ஆசாரி பள்ளம் அரசு மருத்துவமனையில் கொண்டு சென்று சிகிட்சை அளித்தனர். சிகிட்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.